# මුදල් හා ක්‍රමසම්පාදන අමාත්‍යාංශය
# நிதி, திட்டமிடல் அமைச்சு
# MINISTRY OF FINANCE AND PLANNING

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01. ශ්‍රී ලංකාව.
செயலகம், கொழும்பு 01. இலங்கை
The Secretariat, Colombo 01. Sri Lanka

කාර්යාලය / அலுவலகம் / Office: 2484500, 2484600, 2484700
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: (94) - 11 - 2449823
වෙබ් අඩවිය / வெப்சைட் / Website: www.treasury.gov.lk


මගේ අංකය / எனது இல. / My No.: PE/P/SR/01
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2009.11.20

அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம்: 440

சகல அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபை பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் மற்றும் மாவட்ட செயலாளர்கள்,
உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள்,
அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட முறைச் சபைகள்,
அதிகார சபைகள், மற்றும் அரசாங்கத்துக்குச் சொந்தமான கம்பனிகளின் தலைவர்கள் அனைவருக்கும்.

**விலை குறிப்பிடல் முறையின் கீழ் (Shopping) பண்டங்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2010**

**(கட்டிட நிர்மாண மற்றும் ஆலோசனைச் சேவைகள் தவிர்ந்ததாக)**

மேலே விடயம் சம்பந்தமாக வெளியிடப்பட்ட 2008.09.26 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இல: 433, 2008.12.26 ஆம் திகதிய இல: 433 (i) மற்றும் 2009.09.28 ஆம் திகதிய இல: 433 (ii) ஆகியவற்றின் மீது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

02. மேலே அரச நிதிச் சுற்றறிக்கை இல: 433 (ii) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் பந்தி இல: 04 இல் மேல் மாகாணத்தில் அமைந்துள்ள அரசாங்க நிறுவனங்களினால் 2010 ஆம் நிதியாண்டுக்கான பண்டங்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக வழங்குநர்களைப் பதிவு செய்வதற்காக பத்திரிகை அறிவித்தல் வெளியிடப்படலாகாது என அறிவித்திருந்த போதிலும் பல அரசாங்க நிறுவனங்கள் 2010 ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்வதன் பொருட்டு பத்திரிகை அறிவித்தல்கள் வெளியிடப்படுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. இதன் பின்னர் பண்டங்கள் மற்றும் சேவைகள் தொடர்பாக 2010 ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்யாமல் இருக்குமாறும் அவ்வாறான அறிவித்தல்கள் வெளியிடுவதனைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் அறிவிக்கப்படுவதுடன், ஏற்கனவே அவ்வாறாக அறிவித்தல்கள் வெளியிடப்பட்டிருப்பின் அப்பட்டியல்களிலிருந்து வழங்குநர்கள் தெரிவு செய்யப்படுவதனை நிறுத்துமாறும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

03. எவ்வாறாயினும், அரச நிதித் திணைக்களத்தினால் வழங்குநர்கள் பதிவு செய்யப்பட்டிருக்கும் பண்டங்கள் மற்றும் சேவைகள் தொகுதிகளுக்கு உட்படுத்தப்படாத விடயங்களுக்கு மேல் மாகாணத்தில் அமைந்துள்ள அரசாங்க நிறுவனங்களுக்கான வழங்குநர்கள் பதிவு செய்வதன் பொருட்டு பத்திரிகை அறிவித்தல்கள் வெளியிடத் தேவைப்படுமாயின், அதற்கான அரச நிதித் திணைக்களத்தின் எழுத்து மூல அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் அறிவித்தல்கள் வெளியிடப்படுதல் சம்பந்தமாக எதிர்ப்புகள் இல்லை என்பதனையும் தயவுடன் அறியத்தருகின்றேன்.

04. இது சம்பந்தமாக ஏற்கனவே அரச நிதித் திணைக்களத்தின் சுற்றறிக்கை அறிவித்தல்களுக்கு மாற்றமாக செயற்பட்டிருப்பின், அது பற்றிப் பரிசோதனை செய்து எனக்கு அறிவிக்குமாறும் தெரிவிப்பதுடன், அரச நிதிச் சுற்றறிக்கை 433 (ii) இன் 06 ஆம் பந்தி அறிவுறுத்தல்களின் பிரகாரம் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் மேலும் அறிவிக்கப்படுகின்றது.

05. இவை பற்றிய மேலதிக விபரங்கள் தேவைப்படின் தொலை பேசி இலக்கம் 2484614 மூலம் அரச நிதித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் திரு. வசன்த ஏக்கநாயக்கா அல்லது தொலை பேசி இலக்கம் 2484918 மூலம் மேலதிக பணிப்பாளர் நாயகம் திரு. ஐவன் திசேரா ஆகியோருடன் தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

06. இந்தச் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு தங்களது அமைச்சுக்கும்/ திணைக்களத்துக்கும்/ நிறுவனத்துக்கும் இணைந்துள்ள சகல நிறுவனங்களுக்கும் அறிவுறுத்துமாறு தயவுடன் வேண்டிக் கொள்கின்றேன்.

ஒப்பம்: **உதய ரஞ்சித் செனவிரத்ன**

திறைசேரிப் பிரதிச் செயலாளர்

பிரதி : கணக்காய்வாளர் நாயகம்